بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** *(அய்யதஹுல்லலாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

February 28 2014

**தமிழாக்கம் : முஅல்லிம் M. நிஸாமுத்தீன் சாஹிப்**

# சர்வ சமய மாநாடு

***தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:***

கடந்த குத்பாவில் நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பற்றிய முன்னறிவிப்பைக் கூறியிருந்தேன். அதில் அன்னார் வெளிப்படையான மற்றும் மறைவானதுமான அறிவுகளைக் கொண்டு நிரப்பப்படுவார்கள் என்ற செய்தியும் இருந்தது. அன்னாரது அறிவும், இறைஞானமும், திருக்குர்ஆனின் விரிவுரைகள் குறித்த பார்வையும், அவற்றைப் பற்றி மற்றவர்கள் வெளிப்படுத்தி இருந்த கருத்துகள் குறித்தும் குறிப்பிட்டேன். அவற்றை தொடர்வதாயின் மாதக்கணக்கில் அல்ல வருடக்கணக்கில் கூற முடியும். அவற்றைக் கூறுவது சாத்தியமில்லை. ஆனால் சென்ற குத்பாவில் நான் ஒரு விஷயத்தைக் கூற விரும்பி இருந்தேன். நேரம் குறைவாக இருந்ததால் சொல்ல முடியவில்லை. அதனை இன்று கூறுவேன். இது இன்றிலிருந்து 90 ஆண்டுகளுக்கு முந்தைய விஷயமாகும். அதுவும் இந்த நகர் – இலண்டனுடன் தொடர்புடையதாகும்.

உங்களில் பெரும்பாலார் இதனை அறிந்திருகக் கூடும். செப்டம்பர் 1924 –ல் ஒரு சர்வ சமயக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. அதில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். இக்காலத்திலாவது அஹ்மதிகள் மீது உலகின் பல்வேறு இடங்களில் அநீதியிழைக்கப்படுகிறது என்பதால் நம்மைப் பற்றிய அறிமுகம் ஏற்பட்டுள்ளது; தொடர்பு ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக பல மனித உரிமைக் கழகங்களின் பார்வையும் நம்மீது விழுகிறது. இந்தத் தொடர்புகளின் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர்களும், படித்தவர்களும் இங்கும் சரி, மற்ற இடங்களிலும் சரி நம்மை அறிந்துள்ளனர்.

ஆனால் அக்காலத்தில் இவை எதுவும் இருந்ததில்லை. இருந்தும், அல்லாஹ் ஒரு சிறப்பான சூழ்நிலையை ஏற்படுத்தினான். Conference நடத்தக்கூடியவர்கள் தமக்குள் ஆலோசனை செய்து விட்டு, அன்னாரை இலண்டன் வந்து இஸ்லாமிய மார்க்கம் பற்றி எடுத்துக் கூறுமாறு விண்ணப்பித்தனர். அல்லாஹ் உடைய சிறப்பான உதவியினாலேயே இது நடந்தது. நாம் ஜமாஅத்தின் நிதிநிலைமையைப் பார்க்கும்போது, 11 பேரைக் கொண்ட ஒரு குழுவுடன் அன்னார் இலண்டனுக்கு வந்தது சாதாரண விஷயமல்ல. முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தனது செலவை தாமே ஏற்றுக் கொண்டார்கள். மற்றவர்களுக்காக கடன் வாங்க வேண்டி இருந்தது. முதலில் செல்ல வேண்டாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. பிறகு துஆ, இஸ்திக்ஃபார் மற்றும் ஜமாஅத்தின் ஆலோசனைகளுக்குப் பிறகு இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. அல்லாஹ் உடைய உதவியின் காட்சியை அங்கு ஒவ்வோரிடத்திலும் பார்க்க முடிந்தது. இது ஒரு கலீஃபத்துல் மஸீஹின் முதல் ஐரோப்பிய சுற்றுப் பயணமாக இருந்தது. சிரியா, எகிப்து, பாலஸ்தீனம் போன்ற நாடுகளுக்கும் சென்றார்கள். அரபு நாடுகளுக்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களைத் தவிர வேறெந்த கலீஃபாக்களும் சென்றதில்லை. அதற்குப் பிறகு சூழ்நிலைகள் மோசமாகிக் கொண்டே சென்றன. கெடுபிடிகள் அதிகமாகி விட்டன.

இப்போது நான் அந்த Conference உடைய பல்வேறு அம்சங்கள் மற்றும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் குறித்த ஆங்கிலேயர்களின் தாக்கங்கள் பற்றி எடுத்து வைப்பேன். அன்னாரின் சுய மேன்மைகள் மற்றும் அவர்களின் பரந்த ஞானம் குறித்து அவர்கள் கூறுகின்றனர். இது நமது இளைஞர்களுக்கு தெரிந்திருக்க வேண்டிய வரலாற்று அம்சங்களும் ஆகும். அக்காலத்தில் கப்பல் மூலம் பயணம் செய்யப்பட்டது. பல நாட்கள் பயணம் மேற்கொண்டனர்.

ஒருநாள் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் தம்முடன் இருந்தவர்களுடன் தொழுது கொண்டிருந்தார்கள். கப்பலின் மேல் தளத்தில் முதலாம் வகுப்பு மற்றும் இரண்டாம் வகுப்பு பகுதிகளுக்கு இடையில் தொழுகை நடந்தது. தொழுகை முடிந்து அமர்ந்திருந்தார்கள். உடன் வந்தவர்களும் அமர்ந்திருந்தனர். அப்போது அங்கிருந்த இத்தாலியைச் சேர்ந்த ஒரு மருத்துவர், அங்கு கடந்து செல்லும் போது, இவர்கள் அமர்ந்திருப்பதைப் பார்த்தபோது, அவர் வாயிலிருந்து அவரையும் அறியாமல் இவ்வார்த்தை வெளிவந்தது. 'Jesus Christ and his Twelve Disciples – இயேசு மஸீஹும் அவரது 12 சீடர்களும்' என்று கூறினார். இது டாக்டர் ஹஸ்மத்துல்லாஹ் சாஹிபுடைய அறிவிப்பாகும். நான் மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனேன். அந்த மருத்துவர் போப் வசிக்கின்ற இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர் ஆவார். அவர் எவ்வளவு சரியான ஞானமிக்க வார்த்தையைக் கூறினார்!

ஹுஸூர் (ரலி) அவர்களுடன் 11 பேர் இருந்தனர். அவர்களுடன் 12வது நபராக வக்கீல் சவுத்ரி முஹம்மது ஷரீப் சாஹிப் இருந்தார். அவர் தமது செலவில் பயணத்தில் கலந்து கொண்டார். Wembley Conference என்று அழைக்கப்பட்ட அந்த கருத்தரங்கின் வரலாற்றுச் சம்பவங்கள், பின்னணிகள், நோக்கங்கள் குறித்து எடுத்து வைக்கிறேன். 1924 –ல் பிரிட்டனில் புகழ்பெற்ற Wembley கண்காட்சியின் அமைப்பாளர் வில்லியம் லோஃப்டஸ் என்பவர், இந்த வருடம் கண்காட்சியுடன் ஒரு சமயக் கருத்தரங்கும் நடத்த வேண்டும் என்ற தனது கருத்தை எடுத்து வைத்தார். அப்போது உலகம் முழுவதும் பரவியிருந்த பிரிட்டீஷ் சாம்ராஜ்ஜியத்தில் இருந்த பல்வேறு நாடுகளின் அறிஞர்களை அழைத்து வந்து அவர்களைக் கொண்டு தத்தமது மதத்தின் கொள்கைகளைப் பற்றி எடுத்து வைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. கண்காட்சியின் அமைப்பாளர்களுள் கிழக்கத்திய அறிவுபடைத்த மேல்நாட்டு அறிஞர்களும் அடங்கி இருந்தனர். அவர்களும் இக்கருத்தில் ஒன்றுபட்டனர்.

The School of Oreintal Studies of London University இதற்கென ஒரு கமிட்டி அமைத்தது. அந்தக் கமிட்டியின் ஏற்பாட்டின் கீழ் பரந்த அளவில் விரிவாக இந்த Conference –ஐ நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. Conference நடத்துவதற்கு இலண்டனிலுள்ள Imperial Institute என்ற இடம் நிர்ணயம் செய்யப்பட்டது. 1924 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 முதல் அக்டோபர் 3 வரை நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது. இந்தக் கமிட்டிதான் அந்தந்த மார்க்கத்தின் சொற்பொழிவாளர்களைத் தேர்ந்தெடுத்தது. இந்து மதம், இஸ்லாம், புத்த மதம், ஃபார்ஸி மதம், ஜைன மதம், சீக்கிய மதம், சூஃபியிஸம், பிரம்ம சமாஜ், ஆர்ய சமாஜ், கன்பூஸியம் போன்ற மதங்களின் பிரதிநிதிகளை அழைத்திருந்தது. அக்காலத்தில் மவ்லவி அப்துர் ரஹீம் சாஹிப் தர்த் (ரலி) அவர்கள் 1923 –ன் தொடக்கத்திலேயே இலண்டன் வந்திருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு இந்த Conference நடக்கப்போவது பற்றி தெரியாது. இந்தக் கமிட்டியும், சொற்பொழிவாளர்களும் வடிவமைக்கப்பட்டு முடிந்து விட்டது. பிறகு 1924 ஆம் வருடத்தின் ஒரு பகுதி கூட கழிந்து விட்டது. ஓரிடத்தில் அமர்ந்திருந்த போது அங்கிருந்த ஒருவர் இந்த கருத்தரங்கு பற்றி குறிப்பிட்டார். மவ்லானா அப்துர் ரஹீம் நய்யர் சாஹிபிற்கு முன்பாக இந்த பேச்சு நடந்ததும் அவர்கள் அந்தக் கமிட்டியின் செயலராகிய M.M.Sharples –ஐ சென்று சந்தித்தார். உடனே அவரது கூற்றைக் கேட்டதும் இந்தக் கருத்தரங்கில் இஸ்லாம் பற்றிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கருத்தும் இடம்பெற வேண்டும் என்று அந்த செயலர் உணர்ந்தார். அதுபற்றி கமிட்டியிடம் எடுத்து வைக்கப்பட்டது. கமிட்டியின் துணைத் தலைவர் டாக்டர் Thomas W. Arnold என்பவர் இதன் பக்கம் கவனம் செலுத்தினார். நய்யர் சாஹிபிடம் சொற்பொழிவாளர்கள் குறித்து ஆலோசனை செய்ய வேண்டும் என்று கருதினர். அவர்களது அறிவினால் கவரப்பட்டார்.

சில நேரங்களில் நாம் இதுபோன்ற சமயங்களில் காலம் கடந்து விட்டது. இனி எதுவும் செய்ய முடியாது என்று அமர்ந்து விடுகிறோம். ஆனால் அவர் எல்லாம் முடிந்த பிறகும் கூட தைரியத்துடன் சென்றார்; முழு அமைப்பாளர்களையும் ஒப்புக் கொள்ளவும் வைத்தார்.

நய்யர் சாஹிப் அவர்களுடன் அக்கமிட்டி அந்த நிகழ்ச்சியை மீண்டும் சரி பார்த்தது. இந்து மதம், புத்த மதம் ஆகியவற்றின் பிரதிநிதிகளின் பெயரும் அத்துடன் சூஃபிஸம் சார்பாகவும் பிரதிநிதிகள் அழைக்கப்பட வேண்டும் என்று ஆலோசனை செய்யப்பட்டது. சூஃபிஸம் சார்பாக மேலும் சூஃபி ஹாபிஸ் ரோஷன் அலி சாஹிப் உடைய பெயர் எழுதப்பட்டது. கூடவே, ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய அனுமதி பெறாமல் ஹஸ்ரத் ஹாபிஸ் ரோஷன் அலி சாஹிப் அழைக்கப்படவேண்டாம் என்று கூறப்பட்டது. இந்த பெயர்கள் எல்லாம் கமிட்டியில் எடுத்து வைக்கப்பட்டதும், டாக்டர் ஆர்னல்ட் மற்றொரு புரொபொஷர் மற்றும் பிற உறுப்பினர்கள் மிகவும் தூய உள்ளத்துடன் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களை Conference –ல் கலந்து கொள்ள அழைக்க வேண்டும் எனவும் ஹஸ்ரத் சூஃபி சாஹிபையும் உடன் அழைத்து வருமாறு வேண்டுகோள் விடுப்பது என்றும் முடிவெடுத்தனர். இவ்வாறு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு பிரிட்டனிலுள்ள

பெரிய அறிஞர்களின் அழைப்பு வந்து சேர்ந்தது. எவ்வாறிருப்பினும், நான் கூறியது போன்ற பெரும் யோசனைக்குப் பிறகுதான் அந்த அழைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் Conference –ற்காக கட்டுரை எழுதத் தொடங்கினார்கள். அதன் மொழிபெயர்ப்பு, திருத்தம் ஆகிய பணிகளை சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப், ஷேர் அலி சாஹிப், ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் ஆகியோர் செய்தனர். ஆனால் கட்டுரையை எழுதும் போது அது மிகவும் நீண்டு விட்டது. அதனைப் படித்துக் காட்டுவது பொருத்தமானதாக இல்லை. அதாவது நேரம் இருக்காது. படித்துக் காட்ட இயலாமல் சுருக்கம் மட்டும் கூறுவதும் சரியாக இருக்காது. எனவே புதிதாக வேறொரு கட்டுரை எழுத வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. பிறகு புதிய கட்டுரை எழுதப்பட்டது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எழுதினார்கள். அது மொழிபெயர்க்கப்பட்டது. அவர்கள் பயணத்தைத் தொடங்கினார்கள்.

செப்டம்பர் 23 ஆம் தேதி அந்த Conference தொடங்கியது. நான் கூறியது போன்று அந்த நாள் ஐரோப்பிய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க நாளாக இருந்து. அன்றுதான் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஒப்பற்ற கட்டுரை வாசிக்கப்படவிருந்தது. அது படிக்கப்படுவதன் மூலம் இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தோற்றம் மகத்துவமிக்க முறையில் வெளிப்பட இருந்தது. ஐரோப்பாவில் இஸ்லாத்தின் தூதுச் செய்தி சரியான கோணத்தில் எடுத்து வைக்கப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இலண்டனில் சொற்பொழிவாற்றுவதாகக் கண்ட ஆன்மீகக் கனவு நிறைவேறியது. அதனை முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அந்த சொற்பொழிவிலேயே குறிப்பிட்டிருந்தார்கள்.

கூறுகிறார்: அன்னாரின் சொற்பொழிவுக்கான நேரம் மாலை 5.00 மணி என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதற்கு முன்னர் இரண்டரை மணி நேரமாக மக்கள் இஸ்லாம் பற்றிய, மார்க்கம் பற்றிய விஷயங்களையும் தொடர்ந்து அமர்ந்து கேட்டு வந்தனர். அவர்கள் பேசுவதற்கான நேரம் வந்ததும், அங்கிருந்த மக்கள் மட்டுமின்றி வெளியிலிருந்தும் அதிகமானவர்கள் ஹாலுக்குள் வந்தனர். அரங்கு முழுவதும் நிறைந்து விட்டது. அதற்கு முன்னர் எந்த சொற்பொழிவுக்கும் இந்த அளவு வருகை இருக்கவில்லை. கூட்டத்தின் தலைவர் ஸர் தியோடர் மொரிசன் ஹுஸூர் அவர்களை அறிமுகம் செய்த பிறகு மிகவும் கண்ணியத்துடனும் உணர்ச்சியுடனும் ஹுஸூரிடம் விண்ணப்பித்தார். உடனே ஹுஸூர் அவர்கள் எழுந்து ஒரு சிறு சொற்பொழிவை ஆங்கிலத்தில் நிகழ்த்தினார்கள்.

அதில் கூறினார்கள்: தலைவர் அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே! முதலில் நான் இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். அவனே இவ்வாறு மக்கள் மார்க்கம் சார்பான கேள்விகளின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும், அவர்கள் பல்வேறு மார்க்க உரைகளைக் கேட்டு எந்த மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பார்க்க வேண்டும் என்றும், இந்த Conference –ன் அமைப்பாளர்களின் உள்ளத்தில் எண்ணத்தை உருவாக்கினான்.

பிறகு கூறினார்கள்: இதற்குப் பிறகு நான் எனது சீடராகிய சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபிடம், எனது கட்டுரையைப் படித்துக் காட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். நான் எனது மொழியில் கூட எழுதப்பட்ட கட்டுரைகளை வாசிக்கும் பழக்கம் உள்ளவனல்ல. நான் எப்போதுமே சொற்பொழிவை நாவினால் உரையாகவே நிகழ்த்துவேன். 5–6 மணி நேரம் வரை கூட பேசுவதுண்டு. மார்க்கத்தின் விவகாரங்கள் இவ்வுலகத்துடன் முடிந்து விடுவதில்லை. அது மரணத்திற்குப் பிறகும் கூட மறுவுலகம் வரை செல்லக்கூடியது. மனிதனின் நிரந்தரமான நிம்மதி மார்க்கத்துடன் தொடர்புடையதாகும். எனவே நீங்கள் இதனை ஆய்வு செய்யுங்கள். சிந்தனை செய்யுங்கள். நீங்கள் கவனமாகக் கேட்பீர்கள் என்று நம்புகிறேன்.

இதற்குப் பிறகு சவுத்ரி சாஹிப் ஒரு மணி நேரம் அந்த சொற்பொழிவைப் படித்தார்கள். மிகவும் ரசணையுடன் கட்டுரை படிக்கப்பட்டது. சவுத்ரி சாஹிப் உடைய தொண்டை சரியில்லாத நிலையிலும் கூட அல்லாஹ் சிறப்பான ஒத்துழைப்பை நல்கினான். மிகவும் நல்ல முறையில் அன்னார் படித்தார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபதுல் மஸீஹ் (ரலி) அவர்கள் அதில் ஓரிடத்தில் கூறியிருந்தார்கள். சவுத்ரி சாஹிப் உடைய குரலில் பேசுவது உண்மையில் என்னுடைய நாவு தான். அதாவது சவுத்ரி சாஹிப் படிக்கிறார்கள். ஆனால் அது சவுத்ரி சாஹிபின் நாவல்ல. அது எனது நாவாகும்.

இக்கட்டுரையைக் கேட்டவர்களிடம் ஒரு மெய்மறந்த நிலை ஏற்பட்டது. அந்த வருகையாளர் அனைவரும் அஹ்மதிகள் என்பது போன்று காணப்பட்டது. அனைவரும் அப்படியே அதில் மூழ்கித் திளைத்து காணப்பட்டனர். இஸ்லாம் பற்றி கட்டுரையில் கூறப்பட்ட விஷயங்களில் புதிய கருத்துகள் கூறப்படும் போது சிலர் தமது இருக்கைகளில் மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்தனர். அடிமைகள், வட்டி, பலதாரமணம் போன்ற விவகாரங்கள் மிகத் தெளிவாக அதில் விளக்கப்பட்டிருந்தன. கிறித்தவ ஆண்களும், பெண்களும் மிக மகிழ்ச்சியுடன் அதனைக் கேட்டுக்

கொண்டிருந்தனர். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு சொற்பொழிவு முடிந்தது. மக்கள் மிகவும் ஆக்ரோஷமாக கரவொலி எழுப்பினர். பல நிமிடங்கள் கூட்டத்தின் தலைவர் காத்திருக்க வேண்டியதாயிற்று. இந்த உரை அன்வாருல் உலூமின் 8வது தொகுதியில் உள்ளது.

எவ்வாறிருப்பினும், சுருக்கமாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இந்த உரையில் ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் அடிப்படை, 1889 –ல் ஜமாஅத்தின் நிர்மாணம் குறித்து குறிப்பிட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்தபடி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய மஹ்தி என்ற வாதம் குறித்தும், அதுபோன்று மஸீஹ் என்ற வாதம் குறித்தும், அது இன்ஜீலிலும் இஸ்லாமிய நூல்களிலும் உள்ளன என்றும் குறிப்பிட்டார்கள். அவர்களது இந்த வாதத்தினால் எதிர்ப்பை சந்திக்க வேண்டியது ஏற்பட்டது. முஸ்லிம் உலமாக்கள் எதிர்த்தனர். இருந்தும், அவர்களைச் சுற்றி மக்கள் குழுமினர். அல்லாஹ்வின் அருளால் ஒரு ஜமாஅத் உருவானது. உலகின் பல்வேறு பகுதியில் அந்த ஜமாஅத் சிறிது சிறிதாக உருவாகத் தொடங்கியது என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கட்டுரையின் சுருக்கத்தைத்தான் நான் கூறிக் கொண்டிருக்கிறேன். சுருக்கம் என்ன? மிக மிகச் சுருக்கம் என்றுதான் கூற வேண்டும். பல்வேறு கருத்துக்களைக் கொண்ட அக்கட்டுரைக்கே ஒருமணி நேரம் பிடித்தது என்று கூறினேன். அதற்கு முன்னர் எழுதப்பட்ட அஹ்மதிய்யத் என்ற உண்மை இஸ்லாம் என்ற திரண்ட நூல் கணிசமான பக்கங்கள் கொண்ட நூலாகும்.

எவ்வாறிருப்பினும், அன்னார் அடுத்து கூறினார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய மரணத்திற்குப் பிறகு கிலாஃபத் அமைப்பு உருவானது. அந்த கிலாஃபத்தின் அமைப்பின் கீழ் இவை நடைபெறுகின்றன. உலகின் டஜன்கணக்கான நாடுகளில் ஜமாஅத் நிறுவப்பட்டுள்ளது. ஒவ்வொரு மார்க்கத்தின் மக்களும் இந்த ஜமாஅத்தில் இணையத் தொடங்கினர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள், முன்னறிவிப்புகளுக்கேற்ப மஸீஹ் மவ்ஊதின் தோற்றம் இக்காலத்தில் தோன்றவிருந்தது. வரக்கூடியவரைப் பற்றி பல அடையாளங்கள் கூறப்பட்டருந்தன என்று தெளிவுபடுத்தியுள்ளார்கள். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத (அலை) அவர்கள் கூறியிருந்தார்கள். இறைவன் தனது நல்லடியார்களுடன் பேசுகிறான். அவர்களது துஆக்களைக் கேட்கிறான். இறைவன் மேன்மேலும் கருணை காட்டுபவனும் பரிவுகாட்டுபவனும் ஆவான். மஸீஹ் மவ்ஊதை அனுப்பி இக்காலத்திலும் கூட சீர்திருத்தத்திற்கான வழியை ஏற்படுத்தினான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இறைவனது இருப்பின் மீது உறுதியை ஏற்படுத்தி அவனது ஏகத்துவத்தை நிரூபித்து அவனுடன் தொடர்பை ஏற்படுத்தி இன்றும் கூட இறைவன் உயிருடன் இருப்பதற்கு நிரூபணம் தந்தார்கள்.

மேலும் கூறினார்கள்: ஒரு மார்க்கம் இறைவனது இருப்பைத் தெளிவாக உணர வைக்க முடியாத போது அது மார்க்கம் என்று கூறுவதற்குத் தகுதியானதல்ல. பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் தனது கட்டுரையில் நபிமார்களின் நிலைகள், ஒவ்வொரு மனிதருடனும் அவனது ஆன்மீக உயர்வு வலுப்பெற இறைவனது தொடர்பு ஆகியவற்றைத் தெளிபுடுத்தினார்கள். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மிகவும் ஞானத்துடன் தொலைநோக்குப் பார்வையுடன் கூறினார்கள். திருக்குர்ஆன் கடைசியான முழுமையான ஷரீஅத் ஆகும். ஆனால் மனிதன் அறிவு மேம்பாட்டின் இறுதி நிலையை அடைந்து விட்டான் என்று அதற்குப் பொருளல்ல. மாறாக திருக்குர்ஆன் கடைசி வேதம் என்பதன் அழகு என்னவென்றால், அதற்குள் அறிவின் ஆழமான கருவூலங்கள் அடங்கியுள்ளன. அதனைத் தேடி அலைபவருக்கே அது கிடைக்கின்றது. சிரத்தையுடன் அதனைத் தேடும் போது ஆன்மீக முன்னேற்றமும் அத்துடன் மறைத்து வைக்கப்பட்டுள்ள உலகியல் ஞானங்களும் திருக்குர்ஆனிலிருந்து வெளிப்படும். அது ஒவ்வொருவரது ஆர்வத்தைப் பொறுத்ததாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறியதாவது: திருக்குர்ஆன், முஸ்லிம்களின் மீது கூறப்படுகின்ற இஸ்லாம் வாளினால் பரவியது என்ற ஆட்சேபனையையும் மறுக்கிறது. திருக்குர்ஆனின் வசனமாகிய மார்க்கத்தில் எவ்வித பலவந்தமும் இல்லை என்ற வசனத்தை ஆதாரமாக எடுத்து வைத்தார்கள். இஸ்லாத்தை அழித்தொழிக்க, நஷ்டம் விளைவிக்க முயற்சி செய்யும் போது தான் யுத்தம் செய்ய முஸ்லிம்களுக்கு அனுமதி ஆகும். பிறகு பல்வேறு கருத்துக்களை அன்னார் இந்த சொற்பொழிவில் எடுத்துரைத்தார்கள். அடிமை, வட்டியை விலக்குதல், பலதாரமணம், தலாக், நல்லொழுக்கப் போதனை, மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்வு போன்ற விஷயங்களை நான் முன்னர் குறிப்பிட்டது போன்று எடுத்து வைத்திருந்தார்கள். இவற்றில் இஸ்லாமிய கொள்கையை ஒளியூட்டினார்கள்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய உண்மைக்கான ஆதாரங்களைத் தந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு ஆதரவாக வந்த இறை அடையாளங்களைப் பற்றி குறிப்பிட்டார்கள். பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இந்தக் கட்டுரையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய ஒரு கனவு பற்றியும் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று அக்கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை)

அவர்கள் இலண்டனில், ஒரு மேடையில் நிற்கிறார்கள். இஸ்லாம் பற்றி சொற்பொழிவு ஆற்றுகிறார்கள். பிறகு அவர்கள் சில பறவைகளைப் பிடிக்கிறார்கள். அவர்கள் இதற்கு விளக்கம் கூறியதாவது, இலண்டனில் தப்லீக் செய்யப்படும். அவர்கள் மூலமாக மக்கள் இஸ்லாத்தில் இணைவர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய சொற்பொழிவின் மூலம் அவர்களின் அந்த முதல் விளக்கம் நிறைவேறி விட்டது. பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கூற்றைச் சான்று காட்டிக் கூறினார்கள். ஒருவர் ஒருதலைப்பட்ச சிந்தனைகளைத் தவிர்த்து தூய்மையாகி 40 நாட்கள் வரை உண்மையை அறிவதற்காக துஆ செய்தால் உண்மை திறந்து தரப்படும். அந்த மேற்கோள் படித்துக் காட்டப்பட்டது. இறுதியில் இந்தக் கட்டுரையை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு முடித்தார்கள்.

சகோதரிகளே! சகோதரர்களே! இறைவனது ஒளி உங்களுக்காக எழுந்து ஒளி தருகிறது. அதனை இவ்வுலகம் காலம் கடந்து விட்ட காரணத்தால் ஒரு கற்பனைக் கதையாக எண்ணுகிறது. அவ்வொளி இப்போது உங்கள் கண்களுக்கு முன் தென்படத் தொடங்கியுள்ளது. இறைவனது கம்பீரம் ஒரு நபி மூலம் உங்கள் மீது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆம்! அந்த நபி பற்றி நூஹ் –லிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வரை எல்லா நபிமார்களும் முன்னறிவித்திருந்தார்கள். இறைவன் மீண்டும் ஒருமுறை இவ்வாறு நிரூபித்துள்ளான். நான் உங்களுள் இறந்து போனவர்களுக்கு மட்டும் இறைவன் அல்லன். உயிருடன் இருப்பவர்களுக்கும் இறைவனாவேன். சென்று போனவர்களுக்கு மட்டும் இறைவன் அல்லன். எதிர்காலத்தில் வருபவர்களுக்கும் நானே இறைவன் ஆவேன். நீங்கள் இந்த ஒளியை ஏற்றுக் கொள்ளுங்கள். அதன் மூலம் உள்ளத்தை வெளிச்சமாக்குங்கள்.

சகோதரிகளே! சகோதரர்களே! இந்த வாழ்வு தற்காலிகமானது. இதற்குப் பிறகு எல்லாம் முடிந்தது என்று கருதுவது தவறாகும். அழிவு என்ற ஒன்றே இல்லை. ரூஹ் –ஐ அழிவதற்காக இறைவன் படைக்கவில்லை. ரூஹ் நிரந்தரமான வாழ்வுக்காக படைக்கப்பட்டுள்ளது. அறியாத நிலையில் இருந்து மனிதன் அழியாத ஒரு நிலை வரை செல்வதற்காக மனிதன் படைக்கப்பட்டுள்ளான். மரணம் என்பது அவனது பாதையை துரிதப்படுத்தும் ஊடகமேயன்றி ஒன்றுமில்லை. என்ன விஷயம்? சின்னச் சின்ன விஷயங்களில் எல்லாம் ஒருவரையொருவர் முந்துவதற்கு முயற்சி செய்கிறீர்கள்? பெரிய போட்டியை அலட்சியமாக விட்டு விட்டீர்கள்? அதில் இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் ஆகியவற்றைச் சேர்ந்த அனைத்து தலைமுறையினரும் பங்கு பெற்றே ஆக வேண்டும். கிழக்கில் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் தோன்றியுள்ளார் என்று உங்களுக்குத் தெரியாதா? இறைவன் உண்மையுடன் அவரை உங்கள் வாசல் வரை கொண்டு சேர்த்துள்ளான். நீங்கள் உண்மையான உள்ளத்துடன் அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். அதன் மூலம் உங்கள் மீது மேலும் அருள்கள் இறங்கும். உங்களுக்காக இறங்கிய அந்த நிஃமத்தைப் பெற முன்னால் ஓடுங்கள். அதன் மூலம் அவனது நேசமும் உத்வேகத்துடன் எழும். என்ன விஷயம்? உங்கள் மூளைக்கு அசதியை ஏற்படுத்தித் தூக்கத்தைத் தருகிற எல்லா பொருளையும் வெறுப்புடன் பார்க்கிறீர்களே! அப்படியிருக்க, பயனளிக்காத விஷயங்களிடம் ரூஹின் விருப்பத்தை அடக்கி விடக்கூடியவற்றிடம் மட்டும் எப்படி திருப்தி அடைவீர்கள்? நீங்கள் சிலைகளின் முன் குனிவதை மறுக்கிறீர்கள்.

பிறகு வாழ்வின் எந்த அறிகுறிகளும் இல்லா அந்த சிலையின் முன் எப்படி குனிகிறீர்கள்? இறைவன் உங்களுக்காக ஏற்பாடு செய்துள்ள வாழ்வின் நீரைக் குடியுங்கள். அதுவே சிறந்த பானம். அது உங்கள் அறிவை அழிக்கின்ற பானமல்ல. மாறாக அதனை உறுதியாக்கக் கூடியதாகும். மகிழ்ச்சி அடையுங்கள்! பிறகு பைபிளின் பாணியில் அவர்கள் தமது கருத்தைக் கூறுகிறார்கள். மகிழ்ச்சியடையுங்கள்! ஏ மணப்பெண்ணின் தோழிகளே! மகிழ்ச்சி கானம் பாடுங்கள். ஏனெனில் மணவாளர் வந்து விட்டார். எவரை தேடினோமோ அவர் கிடைத்து விட்டார். எதனை எதிர்பார்த்து எதிர்பார்த்து மக்களின் கண்கள் பூத்துப்போய் விட்டனவோ அது உங்கள் கண்களுக்கு முன்னால் வந்து விட்டது. இறைவன் பெயரால் வந்தவருக்கு வாழ்த்துக்கள்! ஆம்! அவரைப் பெற்றவர் எல்லாவற்றையும் பெற்றார்! அவரைப் பார்க்க முடியாதவர் எதனையும் பார்க்க முடியாது! வ ஆகிர தஃவனா அனில் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் என்று முடித்துள்ளார்கள்.

மிகவும் நுட்பத்துடனும் மிகவும் தைரியத்துடனும் அன்னார் இஸ்லாத்தின் சிறப்பையும் விளக்கினார்கள். இஸ்லாத்திற்கு அழைக்கவும் செய்தார்கள். நான் கூறியது போன்று இது ஒரு மணி நேரத்திற்கும் அதிகமான சொற்பொழிவாக இருந்தது. அதன் மிக மிக சுருக்கத்தை நான் சில வாக்கியங்களில் உங்களிடம் எடுத்து வைத்துள்ளேன். எவ்வாறிருப்பினும் இந்த சொற்பொழிவு வந்திருந்தோர் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. அதுபற்றியும் நான் விளக்க விரும்புகிறேன்.

Conference –ன் கூட்டத் தலைவர் கூறினார்: அதுவும் அல்ஃபஸ்ல் ரிப்போர்ட்டில் எழுதப்பட்டுள்ளது. ஜமாஅத் அஹ்மதிய்யாவின் இமாம் மிர்ஸா பஷீருத்தீன் அவர்களின் சொற்பொழிவு பற்றி தியோடர் மாரிஸன் என்பவர் தமது

தலைவரிடம் கூறினார். இது, அதாவது அஹ்மதிய்யா இயக்கம், இஸ்லாம் ஒரு உயிருள்ள மார்க்கம் என்றும் அதன் புதுப்பித்தலுக்காக அறிஞர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும், பச்சைத் தலைப்பாகையுடன் பின்தொடர்பவர்களைக் கொண்ட மிர்ஸா பஷீருத்தீன் அவர்கள், மூஸாவின் இயக்கத்தில் ஒரு ஈஸா இருந்தது போன்று அஹ்மதிய்யத் என்பது இஸ்லாத்தின் புதுப்பித்தலின் இயல்பான தோற்றமாகும் என்றும் சுருக்கமாக இது புதிய ஷரீஅத் அல்ல. மாறாக உண்மையான இஸ்லாத்தின் போதனையைப் பரப்புவதாகும் என்று குறிப்பிட்டுள்ளார் என்றும் கூறினார்.

பிறகு கூட்டத் தலைவர் கூறினார்: நான் அதிகமாக கூற எதுவும் இல்லை. கட்டுரையின் பெருமை, அதன் ரசணையைக் கட்டுரையே காட்டி விட்டது. நான் என் சார்பாகவும், வருகை தந்தோர் சார்பாகவும், கட்டுரையின் சிறப்பிற்காகவும், ஒழுங்கிற்காகவும் உயரிய சான்றுகளுக்காகவும் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மக்களின் முகங்களிலிருந்து வெளிப்படும் மகிழ்ச்சியே நான் கூறிய இக்கருத்தில் அவர்களும் உடன்பட்டுள்ளனர் என்பதற்கு சாட்சி அளிக்கிறது. அன்னாருக்கு நன்றி கூறுவதில் நான் உண்மையாளன் என்று அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நான் உறுதி அளிக்கிறேன். இதில் மக்களின் பிரதிநிதியாக இருக்கிறேன். பிறகு ஹுஸூரைப் பார்த்து கூறினார். தங்களது சொற்பொழிவின் வெற்றிக்காக எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று வாசிக்கப்பட்ட தங்களது கட்டுரை மிகச் சிறந்த கட்டுரையாகும்.

அதன் பிறகு தியோடர் மாரிஸன் என்பவர் நீண்ட நேரம் மேடையில் நின்று மீண்டும் மீண்டும் கட்டுரையைப் புகழ்ந்து கொண்டிருந்தார். இந்த பாயிண்டுகளைக் கூறக்காரணம் கட்டுரையில் இஸ்லாம் தான் தப்லீக் செய்யப்பட்டிருந்தது. வர வேண்டிய மஸீஹ் வந்து விட்டார் என்று கட்டுரையில் தெளிவாகக் கூறப்பட்டிருந்ததும் தெரிய வருகிறது.

பிறகு Free Church –ன் தலைவர் Walter Wash என்பவர். இவர் ஒரு நல்ல பேச்சாளர். அவர் இக்கட்டுரையைப் பற்றி கூறினார். நான் இந்த சொற்பொழிவைக் கேட்க வாய்ப்பு பெற்றதில் மிகவும் பேறுபெற்றவன்.

பிறகு ஒரு சட்டப் பேராசிரியர் கூறினார்: இந்தக் கட்டுரையைக் கேட்கும்போது இந்நாள் ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கும் நாளாகும் என்று உணர்ந்தேன். நீங்கள் மற்ற வழிகளில் ஆயிரமாயிரமாக பணம் செலவழித்தாலும் இவ்வளவு பெரிய வெற்றியைப் பெற்றிருக்க முடியாது.

பிறகு ஒரு பாதிரி கூறினார்: மூன்று வருடங்களுக்கு முன்பு எனக்கு கனவில் காட்டப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் 13 சீடர்களுடன் இங்கு வந்துள்ளார். இப்போது அந்தக் கனவு நிறைவேறியதைப் பார்க்கிறேன். முதலில் 12 சீடர்களைப் பற்றி குறிப்பிட்டேன். பிறகு Function நேரத்தில் ஹஸ்ரத் ஸஃபருல்லாஹ் கான் வந்தார்கள். இத்துடன் 13 எண்ணிக்கை முழுமை அடைந்தது.

பிறகு Conference உடைய செயலராகிய Miss Sharples கூறினார்: மக்கள் இந்த Conference –ஐ மிகவும் பாராட்டுகிறார்கள். ஒரு சாஹிப் இந்த பெருந்தகையைக் குறித்து கூறினார். இவர் இந்தக் காலத்தின் Luther ஆகத் தெரிகிறது. சிலர் கூறினர். இவரது நெஞ்சில் ஒரு நெருப்பு உள்ளது. ஒருவர் கூறினார்: இந்த கட்டுரைதான் எல்லா கட்டுரையை விடவும் சிறந்த கட்டுரையாகும். ஒரு ஜெர்மன் புரொஃபொஸர் மாநாடு முடிந்து செல்லும் போது பாதையில் முன்னால் வந்து ஹுஸூருக்கு வாழ்த்துக் கூறினார். பெரிய பெரிய ஆங்கிலேயர் இருக்கும் போது கூறினார். இது அரிதான சிந்தனைகளாகும். ஒவ்வொரு நாளும் கேட்கக் கிடைக்கக்கூடியவை அல்ல.

மிஸ்டர் லேன். இவர் இந்தியாவில் பெரிய ஓர் அதிகாரியாக இருந்தார். கலீஃபத்துல் மஸீஹ் உடைய கட்டுரையை அனைத்திலும் சிறப்பாக இருந்தது என்று ஒப்புக் கொண்டார்.

பிறகு பாய் அப்துல் ரஹ்மான் சாஹிப் காதியானி கூறுகிறார்கள்: ஒரு சாஹிப் ஹுஸூரிடம் வந்தார். அவர் கூறினார். நான் இந்தியாவில் 30 வருடங்கள் பணியாற்றியுள்ளேன். முஸ்லிம்களின் நிலைமைகளையும் சான்றுகளையும் பற்றி படித்துள்ளேன். ஒரு மிஷனரியாக இந்தியாவில் இருந்துள்ளேன். இன்று நான் மிகவும் ரசணையுடன் சிறப்பான ஒரு கட்டுரை எடுத்து வைக்கப்பட்டதை முதன்முறையாகக் கேட்டேன். வேறெங்கும் கேட்டதில்லை. சிந்தனை அடிப்படையிலும் ஒழுங்கமைப்பட்ட விதத்திலும், ஆதாரங்கள் அடிப்படையிலும் மிகவும் தாக்கம் கொண்டதாக உள்ளது.

ஒரு சாஹிப் கூறினார்: கட்டுரை கேட்பதற்காக பிரான்ஸிலிருந்து வந்திருந்தார். கிறித்தவத்தை விட இஸ்லாத்திற்கு முக்கியம் தருபவராக இருந்தார். இஸ்லாத்தை விட புத்த மதத்திற்கு முக்கியத்துவம் தருபவராக இருந்தார். அவர் கூறுகிறார். நான் உங்கள் கட்டுரையைக் கேட்ட பிறகு புத்த மதத்தைப் பற்றியும் கேட்டுள்ளேன். இப்போது இஸ்லாமே எல்லா மதங்களிலும் உயர்ந்தது என்ற ஒப்புக் கொள்கிறேன். எவ்வளவு சிறப்பாக இஸ்லாம் பற்றி தாங்கள் எடுத்துரைத்தீர்களோ அதற்கு முன் வேறு எந்த மதமும் நிற்க முடியாது. எனது உள்ளத்தில் அதன்

ஆழமான தாக்கம் உள்ளது. பெண்களும் அதிகமாக வந்திருந்தனர். அவர்களும் இந்தக் கட்டுரையை மிகவும் பாராட்டினார்கள்.

ஒரு பெண்மணி கூறினார்: சிலர் என்னிடம் கூறினர். There is a fire in him – அவரிடம் ஒரு நெருப்பு உள்ளது.

பிறகு M.Sharples கூறினார்: ஒரு ஆங்கிலேயர் என்னிடம் வந்து கூறினார். அவரும் ஒரு செயலராக இருந்தார். செயலரின் மனைவியும் ஆவார். அமைப்பாளர்களுள் ஒருவராக இருந்தார். எனக்கு தேநீர் விருந்திற்கான அழைப்பு இல்லை. அங்கு தேநீர் விருந்திற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. எனக்கு உள்ளே வர அனுமதி தாருங்கள். இந்தியாவிலிருந்து இஸ்லாத்தை எடுத்து வைப்பதற்காக வந்த அஹ்மதிகளின் தலைவராகிய அந்த மனிதரை நான் பார்க்க வேண்டும் என்பது மட்டுமே எனது நோக்கமாகும். அப்பெண் ஹஸ்ரத் சாஹிபைச் சந்தித்துப் பேசினார். பிறகு மவ்லவி முபாரக் அலி சாஹிபை விளித்துக் கூறினார். புத்தமத கட்டுரையும் கேட்டேன். மற்ற மதங்களின் கட்டுரையும் கேட்டேன். ஆனால் இதுவே எல்லா கட்டுரைகளை விடவும் சிறந்ததாக இருந்தது.

ஒரு ஜெர்மானியர் அங்கு புரொஃபொஸராக இருந்தார். அவர் கூட்டம் முடிந்து திரும்பும் போது வழியில் முன்னால் வந்தார். இது ஏற்கனவே வந்தது போன்று தெரிகிறது. இதில் விபரமாக உள்ளது. ஹஸ்ரத் சாஹிபிடம் வாழ்த்துக் கூறினார். பெரும் பெரும் ஆங்கிலேயர்கள் இருந்தனர். நான் பார்த்தேன். அவர்கள் தமது கைகளை தமது தொடைகளின் மீது தட்டியவாறு கூறினர்: Rare Ideas. One cannot hear such ideas everyday – மிக அரிதான கருத்துக்கள். இது சாதாரணமாக தினமும் கேட்கக் கிடைக்காது.

அதே ஜெர்மனி புரொஃபொஸர் அறிவிக்கிறார்: சிலர் தம்மையும் அறியாமல் கூறினர். What a beautiful and true Principle! எத்தகைய அழகான உண்மையானக் கோட்பாடுகள்! அந்த ஜெர்மனி புரொஃபொஸர் வெளிப்படுத்திய கருத்து ஓர் அஹ்மதிக்கு திருப்புமுனையாகும். ஆயிரக்கணக்கான பவுண்டுகள் செலவழித்தாலும் பெற முடியாத பெரிய வெற்றியாகும் இது! இந்தியாவில் பெரும் அதிகாரியான லேன் உடைய கருத்தைக் கேட்டேன. அவரது மனைவி அன்று வரவில்லை. அவர் சென்று அவரது வீட்டில் மனைவியிடம் கூறினார். அவர் மறுநாள் வந்தார். அந்தக் குழுவில் உள்ளவர்களை சந்தித்தார். அவர் கூறினார்: நேற்று என்னால் வர முடியவில்லை. நேற்று சொற்பொழிவு எவ்வளவு வெற்றிகரமாக இருந்தது என்று கணவர் சொன்னார் என்றார். மிஸ் கார்னர் என்ற ஒரு பெண் நாத்திகர். இறைவனை மறுப்பவர். அப்பெண் கூறினார். What a charmful – உள்ளத்தை ஈர்க்கக்கூடிய சிறந்த கட்டுரை. மிக உயர்ந்த கருத்துகள். புதிய உண்மைகள். இந்த வார்த்தைகளைப் பெரும்பாலார் பயன்படுத்தியுள்ளனர்.

பஹாயி மதப் பெண் சொற்பொழிவைக் கேட்டார். எங்களுடனே வந்தார். கூறினார். நான் பஹாயி சிந்தனையில் இருந்தேன். இன்று இந்த சொற்பொழிவைக் கேட்டு என்று கருத்துகள் மாறி விட்டன. இன்னும் அதிகமான சொற்பொழிவுகளைக் கேட்க விரும்புகிறேன். ஆனால் எனக்கு எப்போது எங்கு என்று கூறினால் நான் கண்டிப்பாக வருவேன்.

ஒரு கிறித்தவ பெண் தனது மகளுடன் வந்தார். தூய உள்ளத்துடன் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பின்னால் சென்றார். எனது வீட்டிற்கு வியாழக்கிழமை தேநீருக்காக வாருங்கள். ஹஸ்ரத் சாஹிப் தமது பணிகளைக் கூறி முடியாமையைத் தெரிவித்தார்கள். ஆனால் அப்பெண் மிகவும் அன்புடனும் பிடிவாதத்துடனும் அவர்களை சம்மதிக்க வைத்தார். எந்த நேரத்திலும் வாருங்கள். ஆனால் கண்டிப்பாக வாருங்கள் என்று கூறினார். இது எத்தகைய அன்பிற்குரிய கட்டுரை எனில் நாட்டுப்பற்றை விட மிகவும் அன்பிற்குரியது. செய்தித்தாள்களும் இதனை குறிப்பிட்டன. ஒரு பத்திரிகை Manchester Guardian 24 செப்டம்பர் 1924 –ல் தமது பத்திரிகையில் எழுதியது. இந்தக் கருத்தரங்கில் களிப்பூட்டும் ஒரு பரபரப்பான ஒரு சம்பவம் நடந்தது. இஸ்லாத்தின் ஒரு புதிய பிரிவின் மூலம் அது வெளிப்பட்டது. இஸ்லாத்தின் புதிய பிரிவு என்று நாம் நமது வசதிக்காக அவர்களைக் குறிப்பிட்டுள்ளோம். அதனை அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இவ்வாறும் தெளிவுபடுத்தி விட்டார்கள். இப்பிரிவின் அடிப்படையை இன்றிலிருந்து 34 வருடங்களுக்கு முன் மஸீஹ் அமைத்தார். அவரைப் பற்றி பைபிள் மற்றும் பிற நூல்களில் உள்ளது. இவர்களின் வாதமாவது இறைவன் தனது தெளிவான இல்ஹாம் மூலம் இவ்வியக்கத்தின் அடிப்படையை நாட்டினான். அதன் நோக்கம் மனித குலத்தை இஸ்லாம் மூலமாக இறைவன் வரை கொண்டு சேர்ப்பதாகும்.

இந்தியாவில் வசிக்கின்ற ஒருவர் ஒரு வெள்ளைத் தலைப்பாகை அணிந்துள்ளார். அவரது முகம் ஒளிமயமானதும் மகிழ்ச்சி அளிப்பதாகவும் உள்ளது. கருப்புத்தாடி வைத்துள்ளார். அவரது பெயர் His Holiness ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அல்ஹாஜ் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது சுருக்கமாக கலீஃபத்துல் மஸீஹ் மேற்கண்டவர் தமது கட்டுரையின் பெயரை இஸ்லாத்தில் அஹ்மதிய்யா இயக்கம் என்று வைத்திருந்தார். அவரது ஒரு சீடர் சிவப்பான ரோமானிய தொப்பி அணிந்திருந்தார். அக்கட்டுரையை மிகச் சிறப்பாக வாசித்தார். அவரது கட்டுரையை

இஸ்லாத்திற்கு மிகவும் ஆதரவளிக்கும் விதத்தில் எழுதியவர், ஒரு ஆவேஷமான வேண்டுகோளுடன் கட்டுரையை முடித்திருந்தார். வருகை தந்திருப்பவர்களை புதிய மஸீஹின் புதிய போதனைகளை ஏற்றுக் கொள்ளுமாறு அழைத்திருந்தார். அதனை எடுத்துக் கூறுவதும் அவசியமாகும். இதில் குறிப்பிடப்பட்ட அளவுக்கு அழகாக வேறு எந்த கட்டுரையிலும் கூறப்படவில்லை.

பாய் அப்துர் ரஹ்மான் சாஹிப் காதியானி கூறுகிறார்: கட்டுரை முடிந்தவுடன் Resolution ஏகமானதாக தேர்வு செய்யப்பட்டது. இந்தப் பயனுள்ள அறிவுப்பூர்வமான சிந்தனைகளைக் கொண்ட கட்டுரையை தந்ததற்காக His Holiness அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். ஒரு புரொஃபொஸரும் பாதிரியுமான ஒருவர் இந்தக் கட்டுரை வாசிக்கப்படவிருக்கும் செய்தி கேள்விப்பட்டு நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு வந்தார். பிறகு லெக்ஸர் நடந்த இடத்திற்குச் சென்றார். இக்கட்டுரையால் அதிகமாக கவரப்பட்டார். இயக்கத்தின் சில நூல்கள் வாங்கினார். கட்டுரையைக் கேட்டுக் கொண்டிருந்த போது அவர் உணர்ச்சி மிகுதியால் தமது இருக்கையில் இருந்து மீண்டும் மீண்டும் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தார். பிறகு வருவதாகவும் வாக்களித்தார். இஸ்லாத்தின் இந்தக் கருத்துகளை இனி தப்லீக் செய்வேன் என்றார். Teaching of Islam –ல் கூறப்பட்ட கருத்துக்களை எடுத்துச் சொல்வேன் என்றார். வாசிக்கப்பட்ட அந்தக் கட்டுரையையும், முதலில் நீண்டதாக இருந்தால் படிக்க முடியாது என்ற நிலையில் விடப்பட்ட கட்டுரையையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதில் ஜமாஅத்தின் விபரம் பிரச்சார நிலையங்கள் அதில் கூறப்பட்டுள்ளன. இப்போது அதனை விட பன்மடங்கு ஜமாஅத் பெருகி விட்டது. ஆனால் அக்கட்டுரையின் கருத்துகள், அறிவுகள் இன்றும் நிலைநிற்கின்றன. ஆங்கிலம் அறிந்தவர்கள் நமது இளைஞர்கள் கண்டிப்பாக வாசிக்க வேண்டும்.

அல்லாஹ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு எண்ணற்ற ரஹ்மத்துகளை வழங்குவானாக! அன்னார் நமக்காக கிட்டத்தட்ட ஒவ்வொரு கட்டுரையிலும் எண்ணற்ற கருவூலங்களை விட்டுச் சென்றுள்ளார்கள். அவற்றை சென்ற குத்பாவில் நான் குறிப்பிட்டேன். ஒவ்வொரு தலைப்பையும் தொட்டுச் சென்றுள்ளார்கள். ஃபஸ்லே உமர் பவுண்டேஷனும் அந்தக் கருவூலங்கள் விரைவில் பல்வேறு மொழிகளில் வெளியில் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். இப்போதும் முயற்சி செய்கின்றனர் தான். இன்னும் விரைவாக செய்ய தேவை உள்ளது.

இன்றும் நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழுவேன். அவர் கண்ணியத்திற்குரிய கமால் அஹ்மது குரோ சாஹிப் டென்மார்க்கில் வாழ்ந்தார். 1942 –ல் டென்மார்க்கின் நகரமாகிய ஹொய்பியாவில் பிறந்தார். தொடக்கக் கல்விக்கு பிறகு டீச்சர் யுனிவர்சிட்டியில் பட்டப்படிப்பு முடித்த பிறகு 2003 வரை பல்வேறு மார்க்கங்களை குறித்த பாடங்களைக் கற்பித்துக் கொண்டிருந்தார். அவர் பல்கலைக்கழகத்தின் மாணவராக இருந்த போது இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அப்துஸ் ஸலாம் மேட்ஸன் சாஹிபுடைய மாணவர்களுள் ஒருவர் அவர்கள் மூலமே ஜமாஅத் அஹ்மதிய்யா உடைய தூதுச் செய்தி அவருக்கு கிடைத்து இருந்தது. 1960 உடைய ஆரம்பத்தில் அங்கு முபல்லிக் ஆக இருந்த மீர் மஸீத் அஹ்மது சாஹிப் மூலம் அஹ்மதிய்யத்தை ஏற்கும் வாய்ப்பு கிடைத்தது. மரணம் வரை ஜமாஅத்துடன் மிகவும் விசுவாசத்துடன் தொடர்பு வைத்திருந்தார். கிலாஃபத்துடன் மிக உயர்ந்த நேசம், இன்னும் சொல்வதாயின் பேரன்பு இருந்தது.

நான் டென்மார்க் செல்லும் போது மிகவும் விசுவாசத்துடன் என்னைச் சந்தித்துள்ளார். இவ்வளவுக்கும் அப்போது நோயாளியாகவும் இருந்தார். நான் இருக்கும் வரை தொடர்ந்து வருபவராக இருந்தார். பல்வேறு ஜமாஅத் பொறுப்புகளை வகித்தார். தேசிய காயிது மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, தேசிய தப்லீக் செயலர் போன்ற பொறுப்புகளைப் பல வருடங்களாக விசுவாசத்துடன் செய்து வந்தார். தப்லீக் செய்வதில் பைத்தியமாக இருக்கும் அளவுக்கு ஆர்வம் இருந்தது. எல்லா சந்தர்ப்பத்திலும் டென்மார்க் மக்களுக்கு இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத் பற்றி எடுத்து வைக்கும் எந்த வாய்ப்பையும் விட்டதில்லை.

மனைவி கூறுகிறார்: ஜமாஅத் வேலைகளையெல்லாம் முடித்து விட்டு இரவில் நேரம் கழித்து தான் வீட்டிற்கு வருவார். பிறகு திட்டக் குழுவின் கூட்டத்திற்காக உட்காருவார். பாதி இரவு பணி செய்து அமீர் சாஹிபிற்கு ரிப்போர்ட் கொடுப்பார். பிறகு தான் தூங்குவார். அவரது ஹல்கா மிகவும் விரிவானது. டேனிஷ் பெரியவர்களிடம் நல்ல தொடர்பு இருந்தது. அமீர் சாஹிப் டென்மார்க் எழுதுகிறார்: 1988–89 –ல் முபல்லிக் இன்சார்ஜ் ஆக இருந்தார். மிகவும் கட்டுப்பட்டவராக ஜமாஅத் பணிகளைச் செய்வார். தப்லீக் துறையில் மிகச் சிறந்த ஒத்துழைப்பு தருவார்.

டென்மார்க்கின் பிரதமரை சந்தித்து டென்மார்க் மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட குர்ஆனை தரும் நிகழ்ச்சியில் கமால் குரோ சாஹிப் கலந்து கொண்டார். இன்னும் சொல்வதாயின், சந்திப்பிற்கான ஏற்பாட்டையே அவர் தான் செய்திருந்தார். இது போக இளைஞர்கள், குழந்தைகளுக்காக நுஸ்ரத் பள்ளியில் ஒவ்வொரு ஜுமுஆ நாளின் மாலையிலும் ஒரு நிகழ்ச்சி செய்வார். அதில் சிறுவர் சிறுமியரின் கேள்விகளுக்குப் பதில்களும், அவர்களது

பிரச்சனைகளுக்கு தீர்வும் தருகிற உரையாடல்கள் நிகழ்த்துவார். பல நூல்களும் எழுதியுள்ளார். ஜமாஅத் நூல்களை மொழிபெயர்த்தும் உள்ளார். இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற நூலின் டேனிஷ் மொழிபெயர்ப்பை சரிபார்த்தார். டென்மார்க்கின் அஹ்மதிய்யா ஜமாஅத் பத்திரிகையாகிய Active Islam என்ற பத்திரிகையின் ஆசிரியர்ப் பணியை பல வருடங்களாக நிர்வகித்தார். அதுபோன்று 1970–80 –களில் இஸ்லாமிய நாடுகளில் இருந்து வரும் அகதிகளுக்கு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி சென்று சேர்த்து வந்தார். 2004–ல் பக்கவாதம் ஏற்பட்டது. அதிலிருந்து இயலாமல் வாழ்ந்து வந்தார். அதனை குறித்தும் ஜுமுஆ மற்றும் ஜமாஅத் நிகழ்ச்சிகளில் நீண்ட தூரத்திலிருந்து வந்து கலந்து கொள்வார். அது தவிர அமீர் சாஹிப் அவரை சந்திக்கச் செல்லும் போதெல்லாம் ஜமாஅத்தின் வளர்ச்சி குறித்து விசாரிப்பார். கட்டப்படவிருந்த பிரச்சார நிலையம் குறித்து குறிப்பாக விசாரிப்பார். அமீர் சாஹிபை ஒவ்வொரு முறை சந்திக்கும் போதும், என்னைப் பற்றி – கலீஃபத்துல் மஸீஹ் பற்றி எப்படியிருக்கிறார்கள் என்று விசாரிப்பார். அப்போது கணிசமாக உணர்ச்சிவசப்பட்டு விடுவார். 18 பிப்ரவரி 2014 –ல் அவரது உடல்நிலை மோசமானதாக உணரப்பட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 19 பிப்ரவரி 2014 காலை 5.30 மணி அளவில் 71வது வயதில் அவரது வஃபாத் நிகழ்ந்தது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

ஒரு மனைவி, ஒரு பையன், ஒரு பெண், 5 பேரன் பேத்திகளை விட்டுச் சென்றுள்ளார். அவரது மனைவியும் மிகவும் அதிகமான ஜமாஅத் நிகழ்ச்சிகளில் பங்கெடுக்கக்கூடியவர். மொழிபெயர்ப்புப் பணியும் செய்கிறார். அதிகமாக உதவி செய்பவர். மற்றவர்கள் மத்தியில் நன்கு அறிமுகமானவர்.

டேனிஷ் எலக்ட்ரானிக் மீடியாவின் ஹென்ரிக் ஜான்ஸன் சாஹிப் கூறுகிறார்: குரோ சாஹிப் மகத்தான மனிதர். இன்று நம்மிடம் இல்லை. கமால் சாஹிபை எப்போதும் கண்ணியமாகவே பார்க்கப்பட்டது. எம்மைப் போன்ற பல மாணவர்களின் பார்வையில் பெரும் மதிப்பு வாய்ந்தவர். மிகவும் மரியாதைக்குரியவர். மகத்தானவர். அவரது வகுப்பு எப்போதும் பிரியத்திற்குரியது. நானும் கமாலைப் போன்று கல்வித் துறையுடன் தொடர்புடையவன் தான். படிக்கும் காலம் முழுவதும் கமால் எனக்கு முன்மாதிரியாக இருந்தார். நல்ல அறிவு உடையவர். பலருடைய வாழ்வுக்கு வழிகாட்டியவர். கூறுகிறார்: எல்லா மனிதருமே கனவிலேயே வாழ்க்கையைக் கழிக்கின்றார். ஆனால் ஒரு சிலரே அதனை அடையும் அந்த அறிவைப் பெற்றுள்ளனர். மிகக் குறைந்த சிலரே மனித வாழ்வில் மனிதனாக இருப்பதற்குரிய இரகசியத்தைப் பெற முடியும் என்ற கருத்தை அடைபவராக உள்ளனர்.

பிறகு ஒரு பெண்மணி கூறுகிறார்: கமால் குரோ சாஹிப் எத்தகைய ஆசிரியர் எனில் அவரை எந்த மனிதரும் மறக்க முடியாது. மிஸ்டர் கெனத் சாஹிப் கூறுகிறார். அவர் எத்தகைய ஆசிரியர் எனில் அவரால் மிகுந்த தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளேன். ஒரு நல்ல முத்தகியான மனிதராக இருந்தார். ஒரு பெண்மணி மிஸ் இங்கிரித் என்பவர் சரியான உச்சரிப்பு எதுவாக இருப்பினும் அவர் கூறுகிறார்: பள்ளிப் பருவத்திலேயே தம்மை கமால் குரோ சாஹிபின் மாணவர்கள் என்று கூறக்கூடிய பல மாணவர்கள் எனக்கு இருந்தனர். அவர்கள் எப்போதும் கமால் குரோ பற்றி மரியாதையுடன் பேசுவர். மார்க்கப் பாடத்தில் அவரிடம் பாடம் பெற்ற சீடர்கள் மற்ற மாணவர்களை விட மிகவும் முன்னேறி இருந்தனர்.

எவ்வாறிருப்பினும் இதுபோன்று பல விஷயங்கள் கருத்துகள் உள்ளன. மிஸ்டர் மைக்கேல் என்பவர் கூறுகிறார்: டென்மார்க்கில் எவராவது ஒருவர் அவரது பணிகளைத் தொடர்ந்து செய்யக்கூடியவராக இருப்பார் என்று நம்புகிறேன். அவர் டேனிஷ் மக்களுக்கும் டென்மார்க்கிற்கு வெளியில் பிற நாடுகளிலிருந்து வரக்கூடிய முஸ்லிம்களுக்கும் இடையில் பாலமாக இருந்து செயல்பட்டார்கள். ஆனால் பரிதாபத்துடன் கூறத்தக்க விஷயமாவது நமது சமுதாயத்தில் பரஸ்பர உறவை மேம்படுத்துவதற்குப் பதில் சிலர் நெருப்பில் எண்ணெய் வார்க்கும் வேலையைச் செய்கின்றனர். அல்லாஹ் மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக! அவரது மனைவி மக்களுக்கும் பொறுமையையும் விவேகத்தையும் தருவானாக! ஜமாஅத்துடன் அவர்களை தொடர்பு உள்ளவர்களாக்குவானாக! நான் ஏற்கனவே கூறியது போன்று தொழுகைக்குப் பிறகு இவரது ஜனாஸா தொழுகை நடைபெறும் இன்ஷா அல்லாஹ்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **28.02.2014**

Translated by : Muallim M. NIZAMUDEEN Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456